வருகின்றன. ஆகவே, இது ரொம்ப சீரியஸ்ஸான விஷயம். இதிலே, அரசு இதுவரை பல இன்ஸ்டன்ஸ்களில் ஆக்ஷன் எடுக்கவில்லை. அவர்கள் ஹங்கர் ஸ்டிரைக் இருந்திருக்கிறார்கள் பாத யாத்திரை செய்திருக்கிறார்கள் என்பதிலிருந்து இதுவரையில் எந்த ஆக்ஷனும் எடுக்கவில்லையென்று தெரிகிறது. For a long time it is brewing பல இடங்களில் சுடுகாடு இல்லாதது, குடி தண்ணீர் இல்லாமல் இருப்பது, மாநிலத்திலே பல இடங்களிலே நடப்பதுவாகும். போலீஸ் அவர்களுக்கு உதவியாக இல்லாமலிருப்பதாலே, ரெவின்யூ அஃபிஷியல்ஸ், போலீஸ் இருவரும் ஜாதியிலே ஒன்று படுவதாலே இது வெடிக்கிறது. என்னுடைய கேள்வி, இது சம்பந்தமாக ஒவ்வொரு இடத்திலும் வெடிக்கிறவரைக்கும் காத்திருக்காமல், எல்லா இடங்களுக்கும் ரெவின்யூ போர்ட் மெம்பரை அனுப்பி எந்தெந்த ஊரிலே இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று பார்த்து, அதைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா? அத்தகைய திட்டம் இம்ப்ளிமென்ட் செய்யப்படுகிறதா? இல்லை என்றால் இந்த சேலம் இன்ஸ்டடஸ்ஸுக்குப் பிறகாவது இந்த மாதிரி சர்வே நாடு பூராவும் எடுத்து அதனைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 14—2—1979 ஆம் தேதி வருவாய் வாரிய உறுப்பினருக்கு ஆணையிட்டிருக்கிறோம். ஒரு வாரத்திற்குள் அவர் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு அரசாங்கம் கேட்டுள்ளது. அந்த அறிக்கை வந்தபிறகு அவர் நிலைமையை எடுத்துச் சொல்வதைக் கேட்டபிறகு இந்த அரசாங்கம் யார்மீது தவறு இருந்தாலும் வருவாய்த் துறை அலுவலர்மீது தவறு இருந்தாலும் காவல் துறையினர் மீது தவறு இருந்தாலும் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும். அதே போல் தமிழ்நாட்டிலே எங்கெங்கே இந்தப் பிரச்னை இருக்கிறதோ, அங்கங்கே கண்டிப்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

(2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) உரிமைப் பிரச்சினை அறிவிக்கை குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நான் ஒரு பிரிவிலஜ் மோஷன் கொடுத்து இருந்தேன் ** *** **

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் ஜேம்ஸ் அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னை கொடுத்து இருக்கிறேன் என்று சொல்ல

*மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 பிப்ரவரி 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

லாம். ஆனால் உரிமைப் பிரச்னை என்ன என்பதைப் பற்றி விளக்க ஆரம்பிக்கிறார்கள். உரிமைப் பிரச்னையை அவர்கள் தலைவரிடம் கொடுத்து இருந்தால் அது குறித்து அவர்கள் தெரிந்து கொள்வதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏற்கெனவே நேரம் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு நிச்சயமாக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி, எச். பாண்டியன்): திரு. ஜேம்ஸ் கொடுத்த உரிமைப் பிரச்னை பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் யார் மீது உரிமைப் பிரச்னை என்று சொன்னதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே. இந்த மசோதாவானது அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்து இருக்கின்ற கொள்கைக்கு இசைவாக இல்லை. மாநில அரசாங்கம் அர்ரியர்சை வசூல் செய்வதைத்தான் தள்ளி வைக்கிறது. ரத்து செய்யவில்லை. இதே போன்ற நிலைமை இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்து இருக்கிறது. மேலும், பாக்கி வசூல் செய்வதை ரத்து செய்யவேண்டும் என்று இங்கே ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கும் மசோதா ரத்து செய்வதற்கு பதிலாகத் தள்ளி வைக்க வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், நான் இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.